மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி.

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் மாசித் திங்கள் 06 ம் நாள்

**இடைநிலை மனு எண். 08/2025 -ல்**

**அசல் வழக்கு எண். 61/2020**

1. வீரையன்

2. லலிதா ..... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

**// எதிர்//**

ராஜ்குமார் ...... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பாண்டி தென்னவன், M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.உதயகுமார், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

## உத்தரவு

மனு உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன்படி தாக்கல் செய்து, எதிர்மனுதாரர்/வாதியை தொடர் குறுக்கு விசாரணை செய்வதற்கு ஏதுவாக (Reopen) திறந்து அனுமதி வழங்கி உத்தரவு பிறப்பிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் 1ம் மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவார். எதிர்மனுதாரர்/வாதியால் மனுதாரருக்கு எதிராக சுவாதீன பரிகாரம் கோரி அசல்

வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதில் மனுதாரரது தரப்பில் வழக்கறிஞர் மூலம் வக்காலத்து மற்றும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எதிர்மனுதாரர்/வாதியை முதல் விசாரணை செய்யப்பட்டு, மனுதாரரது தரப்பால் குறுக்கு விசாரணை பகுதி செய்யப்பட்டு, தொடர் குறுக்கு விசாரணை செய்வதற்காக கடந்த 09.12.2024ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தேதிக்கு முன்பில் இருந்து மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும், மனுதாரரது வழக்கறிஞரும் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் இருந்ததால், மனுதாரரது வழக்கறிஞரை சந்தித்து விவரம் தெரிவித்து எதிர்மனுதாரர்/வாதியை தொடர்ச்சியான குறுக்கு விசாரணை செய்ய இயலாமல் போய்விட்டது.

எதிர்மனுதாரர்/வாதியை குறுக்கு விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டு எதிர்மனுதாரர்/வாதி தரப்பு ஏனைய சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/வாதியை தொடர் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி இருப்பதால் அசல் வழக்கினை (Reopen) திறந்து உத்திரவிட வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. இல்லாதபட்சத்தில் மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத கஷ்ட, நஷ்டங்கள் ஏற்படும்.

ஆகவே எதிர்மனுதாரர்/வாதியை தொடர் குறுக்கு விசாரணை செய்வதற்கு ஏதுவாக (Reopen) திறந்து உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபணையின் சுருக்கம் :-</u>**

மனுதாரர்களின் மனு சரியல்ல. சட்டப்படி நிலைநிற்க தக்கதல்ல. முதல் எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாக இருக்கிறது. மனு விவரங்களை

இந்த எதிர்மனுதாரர்/வாதி வன்மையாக மறுக்கிறார். மனுதாரர்களே மனுவை நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள்.

எதிர்மனுதாரர்/வாதியால் வழக்கு சொத்துக்களை பிரதிவாதியிடமிருந்து சுவாதீனம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு இறுதி பட்டியலில் போடப்பட்டு ஏற்கனவே ஒருதலைபட்சமாக 2021ல தீர்ப்பாகியது. அதற்கு பிற்பாடு இந்த பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்து வழக்கானது விசாரணைக்காக 2வது முறையாக இறுதிபட்டியலில் போடப்பட்டு வாதி P.W.1 ஆக விசாரிக்கப்பட்டு ஓராண்டுக்கு மேல் பல தடவைகள் இந்த மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் வழக்கு ஒத்தி வாங்கப்பட்டது.

பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் முன்னிலையாகி எதிர்மனுதாரர்/ P.W.1 ஐ குறுக்கு விசாரணை செய்யவில்லை. மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லை எனக்கூறியிருப்பதும் உண்மையானதல்ல. மனுதாரருக்காக அவரது மூத்த வழக்கறிஞரும், அவரது இளைய வழக்கறிஞரம் பல தடவை இந்த நீதிமன்றத்தில் ஆஜராகி குறுக்கு விசாரணையை நீடித்து வாய்தா பெற்றுக்கொண்டார்கள்.

கடந்த 09.12.2024ம் தேதியில் வேண்டுமென்றே இந்த பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்துவிட்டு வழக்கை குறுக்கு விசாரணை செய்யாமல் விட்டுவிட்டார்கள். மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக ஆக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீண்டும் வழக்கை (Reopen) செய்து வாதி தரப்பு சாட்சி P.W.1 ஐ ரீகால் செய்ய வேண்டும் என மனு கொடுத்திருப்பது சட்டப்படி நிலைநிற்கதக்கதல்ல.

பிரதிவாதிக்காக பல நாட்கள் பலமணி நேரங்கள் வழக்கை ஒத்தி வைத்தும் எந்தவொறு முன்னேற்றமும் இல்லாமல் பிரதிவாதி தரப்பில் பொய்யான காரணங்கள்

கூறப்பட்டு காலதாமதப்படுத்தப்பட்டுள்ளது. வழக்கை ரீஓப்பன் செய்யவும், P.W.1 ஐ ரீகால் செய்யவும் மனுதாரர் கூறியிருக்கும் காரணங்கள் யாவும் பொய்யான காரணங்களாகும். மனுதாரர் தரப்பை நிரூபிக்க எந்தவொரு ஆவணத்தையும் தாக்கல் செய்யாத காரணத்தால் மனுதாரர்களின் ரீஓப்பன், ரீகால் மனுக்களை இந்த எதிர்மனுதாரர்/வாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

**5) <u>தீர்வு:-</u>**

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, நிரூபண வாக்குமூலம், ஆட்சேபணை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** மனுவினை பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது சுவாதீன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்து, எழுவினாக்கள் வனைந்து, எதிர்மனுதாரர்/வாதியை முதல் விசாரணை செய்யப்பட்டு, மனுதாரரது தரப்பால் குறுக்கு விசாரணை பகுதி செய்யப்பட்டு, தொடர் குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிய வருகிறது.

**4.** மனுதாரரது வழக்கறிஞரின் உடல் நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் இருந்ததால், வழக்கறிஞரை சந்தித்து விவரம் தெரிவித்து எதிர்மனுதாரர்/வாதியை தொடர்ச்சியான குறுக்கு விசாரணை செய்ய இயலாமல் போய்விட்டதாகவும்,

எதிர்மனுதாரர்/வாதியை தொடர் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி இருப்பதால் அசல் வழக்கினை (Reopen) செய்ய கோரியுள்ள இம்மனுவிற்கு எதிர்மனுதாரர் தரப்பில் கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டிருந்தாலும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்பதாலும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதாலும், வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலம், வழக்கின் நிலை ஆகியவற்றினை கருத்திற்கொண்டும் நிபந்தனையுடன் இம்மனுவினை அனுமதிக்கலாம் என்றும் தீர்மானிக்கிறது.

**5.** மனுதாரர்கள் வருகின்ற 24.02.2025 அன்று எதிர்மனுதாரருக்கு ரூ.1000/- செலுத்தி வைக்க வேண்டும் என்றும், இம்மனு அனுமதிக்கப்பட்டதிலிருந்து 15 தினங்களுக்குள்ளாக எவ்வித காலதாமதமுமின்றி வழக்கை மீண்டும் திறந்து (Reopen) செய்து மனுதாரர்கள் தரப்பில் தொடர் குறுக்கு விசாரணை செய்து முடிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**6) முடிவில்,** மனுதாரர்கள்/பிரதிவாதிகள், எதிர்மனுதாரர்/வாதிகளுக்கு செலவுத் தொகையாக ரூ.1000/-ஐ மனு அனுமதிக்கப்பட்டதிலிருந்து 15 தினங்களுக்குள்ளாக (24.02.2025)ம் தேதிக்குள் செலுத்தி வைக்க வேண்டும் என்றும், தவறும்பட்சம் தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. இம்மனுவினை மீண்டும் அழைக்க 24.02.2025.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (18.02.2025) அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி .

**<u>குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>**

**இருதரப்பிலும்** : இல்லை

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி .

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் மாசித் திங்கள் 06 ம் நாள்

**இடைநிலை மனு எண். 08/2025 -ல்**

**அசல் வழக்கு எண். 61/2020**

1. திரு.வீரைய்யன், வயது 49, த/பெ.கணேசன், வசிப்பிடம் 4/285/2, தெற்குத் தெரு, அசேஷம், மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.
2. திருமதி.லலிதா, வயது 45, க/பெ.வீரைய்யன், வசிப்பிடம் 4/285/2, தெற்குத் தெரு, அசேஷம், மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

.... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

// எதிர்//

திரு.ராஜ்குமார், வயது 51, த/பெ.துரைராஜ், வசிப்பிடம் தெற்கு தெரு, அசேஷம், மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

தற்சமயம் - 4 வது தெரு, 76, அப்ரஹாம்பண்டிதர் நகர், தஞ்சாவூர் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்.

.... எதிர்மனுதாரர்/வாதி

மனு உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151 ன்படி தாக்கல் செய்து, எதிர்மனுதாரர்/வாதியை தொடர் குறுக்கு விசாரணை செய்வதற்கு ஏதுவாக (Reopen) திறந்து அனுமதி வழங்கி உத்தரவு பிறப்பிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 03.01.2025

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 06.01.2025

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பாண்டி தென்னவன், M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.உதயகுமார், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. மனுதாரர்கள்/பிரதிவாதிகள், எதிர்மனுதாரர்/வாதிகளுக்கு செலவுத் தொகையாக ரூ.1000/-ஐ மனு அனுமதிக்கப்பட்டதிலிருந்து 15 தினங்களுக்குள்ளாக (24.02.2025)ம் தேதிக்குள் செலுத்தி வைக்க வேண்டும் என்றும், தவறும்பட்சம் தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

02. இம்மனுவினை மீண்டும் அழைக்க 24.02.2025.

2025 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24 ஆம் நாள் திங்கட்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் மாசித் திங்கள் 12 ம் நாள்

**இடைநிலை மனு எண். 08/2025 -ல்**

**அசல் வழக்கு எண். 61/2020**

1. திரு.வீரைய்யன், வயது 49, த/பெ.கணேசன், வசிப்பிடம் 4/285/2, தெற்குத் தெரு, அசேஷம், மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

2. திருமதி.லலிதா, வயது 45, க/பெ.வீரைய்யன், வசிப்பிடம் 4/285/2, தெற்குத் தெரு, அசேஷம், மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

.... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

// எதிர்//

திரு.ராஜ்குமார், வயது 51, த/பெ.துரைராஜ், வசிப்பிடம் தெற்கு தெரு, அசேஷம், மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.
தற்சமயம் - 4 வது தெரு, 76, அப்ரஹாம்பண்டிதர் நகர், தஞ்சாவூர் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்.

.... எதிர்மனுதாரர்/வாதி

மனு உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151 ன்படி தாக்கல் செய்து, எதிர்மனுதாரர்/வாதியை தொடர் குறுக்கு விசாரணை செய்வதற்கு ஏதுவாக (Reopen) திறந்து அனுமதி வழங்கி உத்தரவு பிறப்பிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 03.01.2025

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 06.01.2025

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பாண்டி தென்னவன், M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.உதயகுமார், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. செலவுத்தொகை செலுத்தப்பட்டது.

02. மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2025 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.